OS:16/2020

Date: 20.11.2023

பெயர்:முனுசாமி

**பிரதிவாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை :**</u>- வாதி தரப்பில்

நான் இவ்வழக்கில் 3 ம் பிரதிவாதி ஆவேன். 1 ம் பிரதிவாதி ஆனந்தாயி எனது தாயார் ஆவார். 2 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் எனது உடன் பிறந்த சகோதரர்கள், 5 ம் பிரதிவாதி தமிழ்செல்வி எனது உடன்பிறந்த சகோதரி ஆவார்கள் என்றால் சரிதான். வாதியும் எனது சகோதரி ஆவார் என்றால் சரிதான். எனது தகப்பனார் மாணிக்கத்திற்கு முதல் மனைவி மூலம் வாதி பிறந்தார் என்றால் சரிதான். எனது தாயார் 1 ம் பிரதிவாதி ஆனந்தாயி எனது தந்தைக்கு 2 ம் மனைவி ஆவார் என்றால் சரிதான். எனது தகப்பனார் 30.05.2011 தேதியில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் 6 ம் வகுப்புவரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் திருமண தகவல் அமைப்பாளராக இருக்கிறேன். என்னுடைய பிறந்ததேதி என்ன என்றால் 22.08.1976 ஆகும். அதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் எனது வயது 44 என குறிப்பிட்டுள்ளேன் அதன்படி நான் பிறந்த வருடத்தை கணக்கிட்டால் 1979 என்றால் சரிதான். எனது சகோதரர் கண்ணன் என்னைவிட ஓராண்டு மூத்தவர் ஆவார், அவர் BE படித்துள்ளார். அவர் என்ன வேலை செய்கிறார் என்றால் செக்கியூரிட்டியாக பணிபுரிந்து வருகிறார். அதேபோன்று கணேசன் ஒரு வயது எனக்கு இளையவர் என்றால் சரிதான், அவர் 8 ம் வகுப்புவரை படித்துள்ளார். அவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் விவசாயம் செய்துவருகிறார். 5 ம் பிரதிவாதி தமிழ்செல்வி என்னை விட எத்தனை வயது சிறியவர் என்றால் 2 வயது இளையவர் ஆவார்.

எனது தகப்பனார் 17.10.1990 ல் தாவா சொத்துக்களை கிரயம் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். அவர் இருக்கும்வரை எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தாமல் சொத்துக்களை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான், ஆனால் அவர் இருக்கும்போது வாய்மொழியாக எனக்கும், எனது சகோதரர்கள் இருவருக்கும் வாய்மொழியாக பாகம் செய்து கொடுத்துவிட்டார். எழுத்து மூலமாக எனது தந்தை எங்கள் மூவருக்கும் ஆவணங்கள் எழுதி பதிவு செய்து கொடுத்துள்ளாரா என்றால் இல்லை,

வாய்மொழியாகத்தான் சொன்னார். தாவாவில் பதிலுரை போடுவதற்கு நான் சொல்லிதான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் எனது சகோதரர்கள் மற்றும் சகோதரியுடன் சேர்ந்து பிரதிவாதிகள் 1 முதல் 5 பேர் பாகபிரிவினை கடந்த 29.06.2011 தேதியில் செய்துகொண்டோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சொத்துக்கள் முழுவதுமே வா.சா.ஆ.3 ன் படி பாகபிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான்.

வாதிகளுக்கு தாவா சொத்தில் பங்கு உள்ளதா என்றால் இல்லை. பாகபிரிவினையை அனுசரித்துதான் பட்டா எங்களது பெயரில் மாறியுள்ளது என்றால் சரிதான். பாகபிரிவினை பத்திரத்தில் மாணிக்கம் என்பவருக்கு 22.10.1990 தேதிய கிரயபடி பாத்தியப்பட்டும், அவர்மீது பட்டா தாக்கல் ஆகி அனுபவித்து வந்து அவர் காலமான பின்னர் நமக்கு பிதுராஜ்ஜிய மூலமாகவும், வாரிசுபடியும் பாத்தியப்பட்ட ஒன்றுபட்டு அனுபவித்து வந்த பொதுகுடும்ப சொத்துக்களை பிரித்துகொள்வதாக கண்டு பாகபிரிவினை ஆவண வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி பாகபிரிவினை ஆவணம் எழுதப்பட்டதை எனது சகோதரி வாதி முத்துலட்சுமிக்கு தெரியபடுத்தினோமா என்றால் தெரியபடுத்தினோம் அதற்கு அவர் இது உங்களது சொத்து நீங்கள் பாகம் செய்து கொள்ளுங்கள் நான் எதற்கும் வரமாட்டேன் என்று கூறினார். நான் தற்போது சொல்வது முழுவதும் பொய் என்றும், வாதிக்கு சொல்லாமலேயும், தெரியாமலேயும் பாகபிரிவினை ஆவணம் எழுதிகொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. ஒரு பாகபிரிவினை ஆவணம் எழுதவேண்டும் என்றால் குடும்ப உறுப்பினர்கள் அனைவரையும் கேட்டுதான் எழுதவேண்டும் என சட்டநிலைப்பாடு உள்ளது என்றால் சரிதான். வாதிக்கு சொல்லாமலேயே நாங்களாகவே பாகபிரிவினை எழுதிகொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு தெரியபடுத்தினோம். வாதிக்கு பாகபிரிவினை செய்துகொள்ள கூப்பிட்டதற்கு ஏதேனும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை, வாய்மொழியாகத்தான் தெரிவித்தோம்.

நான் வாய்மொழியாகவும் தெரிவிக்கவில்லை, வழக்கறிஞர் அறிவிப்பும் கொடுக்கவில்லை என்று சொன்னால் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுக்கவில்லை என்பது சரிதான், ஆனால் வாய்மொழியாக தெரிவித்தோம். எனது தந்தை வழக்கு சொத்தை கிரயம் பெறும்போது எனக்கு வயது சுமார் 11 இருக்கும் என்றால் சரியல்ல. அப்போது எனது வயது

14 ஆகும். எனது சகோதரர் கண்ணனுக்கு வயது 12 என்றால் சரியல்ல அப்போது அவருக்கு வயது 15. அதேபோன்று கணேசனுக்கு சொத்தினை கிரயம் வாங்கும்போது வயது 10 என்றால் சரிதான்.

**(குறுக்குவிசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/-PW1

ஒப்பம்/- சார்பு நீதிபதி, ஓமலூர்.